**செய்தி வெளியீடு எண்:360** **நாள்: 08.06.2017**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2016-ஆம் ஆண்டில் நடைபெற்ற சட்டசபை தேர்தலுக்காக வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் பத்திர பதிவுக்கான “வழிகாட்டி மதிப்பு நிர்ணயிக்கும் முறை சீரமைக்கப்படும்” என்று தெரிவித்துள்ளார். இதை கருத்தில் கொண்டு, பதிவுத்துறைத் தலைவர் தலைமையிலான மதிப்பீட்டுக் குழு தற்போது மாநிலத்தில் நடைமுறையில் உள்ள சந்தை மதிப்பு வழிகாட்டியை அனைத்து இனங்களுக்கும் **9.6.2017** முதல் **33%** அளவு குறைத்து ஆணையிட்டுள்ளது. இந்த சந்தை மதிப்பு வழிகாட்டியினை குறைப்பதனால் அரசுக்கு ஏற்படக்கூடிய வருவாய் இழப்பினை ஈடு செய்ய விற்பனை (conveyance), பரிமாற்றம் (exchange), தானம் (gift) மற்றும் குடும்ப உறுப்பினர்கள் அல்லாத நபர்களுக்காக எழுதிக் கொடுக்கப்படும் ஏற்பாடு (settlement) போன்ற ஆவணங்களுக்கான பதிவு கட்டணத்தினை 4%-ஆக நிர்ணயிக்கவும், இப்பதிவு கட்டண உயர்வு **09.06.2017** முதல் அமல்படுத்தவும் அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**